| O.S.No. 180/2023 | PW1: திருமதி. லட்சுமி<br>க/பெ. திரு. ரவிக்குமார் | 20-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்தினை 27-06-2013 தேதியன்று கிரையம் வாங்கினேன். தாவா சொத்தினை நான், 2-ம் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து கிரையம் வாங்கினோம். முனுசாமி பிரிக்கப்படாத பாகத்தினை 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளிடம் பலமுறை பாகம் பிரித்து தர சொல்லி கேட்டேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தினை தவறாக கிரையம் செய்து கொடுக்க முயற்சிக்கிறார்கள் என்று பொய்யாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது நான், 2-ம் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் தனிப்பட்ட முறையில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளுக்கு அவகாசம் கொடுக்காமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உண்டான பாகத்தினை பிரித்து கொடுப்பதற்கு 1, 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

**2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்தினை என் கணவர்தான் முன்நின்று கிரைய தொகை பேசி எனது பெயரில் கிரையம் செய்தார் என்றால் சரிதான், தொகை பேசப்பட்டது எனக்கு தெரியும். தாவா சொத்தானது நஞ்சை நிலம் ஆகும். தாவா சொத்தானது மெயின் ரோட்டிற்கு ஒட்டி உள்ளே அமைந்துள்ளது. தாவா சொத்தானது திருவத்திபுரம் நகராட்சியின் எல்லைக்கு உட்பட்டதாகும். தாவா சொத்தினை அனைவரும் மனை

பிரிவுகளாக பிரித்துக்கொள்ளலாம் என்று சொல்லிதான் கிரையம் வாங்கினோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற தாவா சொத்தினை அதன் உரிமையாளர்களில் யாரேனும் ஒருவர் விற்பனை செய்ய முன்வரும்பட்சத்தில் அவரது பாகத்தை பொதுவாக அனைவரும் சேர்ந்து வாங்கிக்கொள்ள வேண்டும் என்று வாய்மொழியாக எங்களுக்குள் பேசிக்கொள்ளப்பட்டது என்றால் அவ்வாறு இல்லை.

2. முனுசாமியின் பாகத்தினை 1-ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியபிள்ளை இரகசியமாக கிரையம் வாங்கினார் என்றால் இல்லை, எங்களுக்கு தெரிந்துதான் கிரையம் வாங்கினார். மேற்படி கிரையம் பற்றி 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சொத்தினை வாங்கிய சமயத்தில் அதனை மண் கொட்டி சரிசமமாக பிரிக்க வேண்டும் என்கின்ற சூழ்நிலையில் இருந்தது என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் மண் கொட்டி சரிசமப்படுத்துவதற்கு 2, 7, 8 பிரதிவாதிகளைத் தவிர மற்ற பிரதிவாதிகள் மறுத்துவிட்டனர் என்று சொன்னால் சரிதான், மண் கொட்டாமல் அப்படியே பிரித்துக்கொள்ளலாம் என்று அவர்களிடம் நான் கேட்டேன். வழக்கு சொத்தினை வாங்கியதன் நோக்கமே அதனை மண் கொட்டி சரிசமப்படுத்தி மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்றாலும், ஆனால் அதனை முறைப்படுத்த யாரும் முன்வரவில்லை என்றாலும் சரியல்ல.

4. மனைப்பிரிவு என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியும், அனைவரின் பாகத்திற்கும் வழி போக ஏற்பாடு செய்து அனைவரும் சமமாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் அர்த்தம் ஆகும். மனை என்பது கட்டிடம் கட்டலாம், காலி மனையாக

அனுபவிக்கலாம். மனையாக பிரித்துக்கொள்வதற்கு நகராட்சியிடம் அனுமதி பெற்று DTCP Approval பெறவேண்டும் என்ற விஷயம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் மனை பிரித்துக்கொள்வதற்கு அனுமதி தேவையில்லை. சரியாக மனைப்பிரிவு பிரித்துக்கொள்ள யாரும் தயாராக இல்லை என்பதால் நான் நீதிமன்றத்தை நாடி வந்தேன் என்றால் பிரதிவாதிகளின் போக்கே எனக்கு பிடிக்கவில்லை, அதனால் நீதிமன்றத்தை நாடி வந்தேன். பிரதிவாதிகள் என்ன சொன்னார்கள் என்றால் DTCP Approval பெற்றுதான் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்ககள், அதில் எனக்கு உடன்பாடு இல்லை. தாவா சொத்தினை வாங்கும்போது மனைப்பிரிவுகளாக பிரித்து அதன்பிறகு பிரித்துக்கொள்ளலாம் என்று சொல்லிதான் அனைவரும் கிரையம் பெற்றோம் என்றாலும், தற்போது அதற்கு முரணமாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. தாவா சொத்தினை பிரித்துக்கொள்வதற்காக ஏற்கனவே சார்பதிவாளர் அலுவலகம் சென்றீர்களா என்றால் இல்லை. 2, 7, 8 பிரதிவாதிகள் தாவா சொத்தினை முறையாக அங்கீகாரம் பெற்ற பிறகு பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார்கள் என்றால் DTCP Approval தேவையில்லை, வழி இருந்தால் போதும். தாவா சொத்தினை சுற்றி உள்ள சொத்துக்கள் ஏற்கனவே வீட்டுமனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். தாவா சொத்து அரசு வழிகாட்டி மதிப்புப்படி நிலமாக வரவில்லை, சதுர அடியாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

6. நகராட்சிக்கு தெரு வழங்கி மனைகளாக பிரித்துக்கொள்ள தயாராக உள்ளீர்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ள வரைபடத்தினை பார்த்தீர்களா என்றால் இல்லை. எங்களது தரப்பில் தாவா சொத்தினை எவ்வாறு பிரிப்பது என்று வரைபடம் எதுவும் போட்டுள்ளீர்களா என்றால் இல்லை, நீதிமன்றம் பிரித்துக்கொடுப்பதை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளோம். தாவா சொத்தினை ஒருவருக்கொருவர் பிரச்சனை ஏற்படாமல் அனுபவிக்கும் விதத்தில் பிரதிவாதிகள் பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார்கள். பிரதிவாதிகள் ஏற்கனவே தாவா சொத்தினை பிரித்துக்கொள்ள தயாராக இருந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் கேட்டபோது நகராட்சிக்கு தெருவினை தானமாக கொடுத்தால்தான் பதிவு செய்ய முடியும் என்று சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைவரும் அனுபவிப்பதற்கேற்ப தாவா சொத்தினை பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார்கள் என்றால் நீதிமன்றம் பிரித்துக்கொடுப்பதை நான் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேன்.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**